# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/34 - 2020 ජූනි මස 19 වැනි සිකුරාදා - 2020.06.19

2180/34 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ๖/ஓ/1/3/30.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பண்டாரகமை பிரதேச செயலாளர் பிரிவில், மாதுபிடிய எனும் ஊரில், இல. 690 ஏ மாதுபிடிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட இல. 4576 மற்றும் 2018.12.31 ஆந் திகதியிடப்பட்ட பிரதான வரை படத்தின் காணித்துண்டு இல. 01 முதல் 02 வரையான விஸ்தீரணம் 4.4490 ஹெக்டயார் அளவிலான கீழ்க் குறிப்பிடப்படும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 01; காணியின் பெயர்: ஊரன்னா கொடவத்தை, பன்வில அல்லது லுணுபிட்டனிய; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஹெல்ப் பொத சில்ட்ரன் நிறுவனம்; விஸ்தீரணம்: சுமார் 4.3589 ஹெக்டயார்**

வடக்கு: எம். ஏ. பெரேரா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணி பிட்டனிய (50552); கிழக்கு: எம். ஏ. பெரேரா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய (50552); தெற்கு: எம். ஏ. பெரேரா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய (50552) துண்டு இல. 02 மற்றும் டப்ளியூ. ஆர். டீ. சில்வா உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய; மேற்கு: எம். ஏ. பெரேரா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய (50552) துண்டு இல. 02 மற்றும் டப்ளியூ. ஆர். டீ. சில்வா உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

02. **துண்டு இல. 02; காணியின் பெயர்: ஊரன்னா கொடவத்தை, பன்வில அல்லது லுணுபிட்டனிய; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடம் மற்றும் கிணறு ஒன்றும் உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஹெல்ப் பொத சில்ட்ரன் நிறுவனம்; விஸ்தீரணம்: சுமார் 0.0901 ஹெக்டயார்**

வடக்கு: டப்ளியூ. ஆர். டீ. சில்வா உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய மற்றும் துண்டு இல. 01; கிழக்கு: துண்டு இல. 01; தெற்கு: துண்டு இல. 01, எம். ஏ. பெரேரா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய (50552) மற்றும் டப்ளியூ. ஆர். டீ. சில்வா உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய; மேற்கு: டப்ளியூ. ஆர். டீ. சில்வா உரிமை கோருகின்ற பன்வில அல்லது லுணிபிட்டனிய.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பண்டாரகமை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புத்திகா றுவனி சமரதுங்க,
பிரதேச செயலாளர்,
பண்டாரகமை.

பிரதேச செயலகம்,
பண்டாரகமை,
2020, யூன் 08.

07 - 175

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: BD/HE/ LND/05/62.
காணி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/3/9/2015/ws/165.

2020.01.08 ஆந் திகதி 2157/24 ஆம் இலக்க மேலதிக வர்த்தமானியில் விபரிக்கப்பட்ட பக்க 01 ஏ இல் தோற்றும் திகதி 2020 மாச்சு மாதம் 10 திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும் திகதி 10, ஓகத்து மாதம் 2020 என அறிவிக்கப்படுகிறது.

எச். பீ. ஏ. ஜீ. அனுருத்த,
பிரதேச செயலாளர்,
ஹாலிஎல.

பிரதேச செயலகம்,
ஹாலிஎல,
2020,யூன் 04.

07 - 176